# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
*************

முறையீட்டு மனு எண்: 226 /மா/2017
ஆணை எண்: 269 /2017
நாள்: 30/11/2017

திருமதி. T. வள்ளியம்மாள்,
திருப்பூர். - முறையீட்டு மனுதாரர்

மாநகராட்சி ஆணையர்,
திருப்பூர். - எதிர்மனுதாரர்

திருப்பூர் மாநகராட்சி, திருப்பூர் நகரம், 4வது வீதி, ஸ்டேன்ஸ் ரோடு, 12/17, (19/13) எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திருமதி. T. வள்ளியம்மாள் என்பவரின் 13.11.2013 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 14.11.2017 அன்று பெறப்பட்டு 226/2017/மா எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டு, முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருப்பூர் மாநகரம், 4வது வீதி, ஸ்டேன்ஸ் ரோடு, 12/17, (19/13) எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திருமதி. T. வள்ளியம்மாள் என்பவர் தாம் திருப்பூர் மாநகராட்சியில் மகப்பேறு உதவியாளராகப் பணியாற்றி 30.06.1996 அன்று வயது முதிர்வின் காரணமாக ஒய்வு பெற்று ஒய்வூதியம் பெற்று வருவதாகவும், தாம் கண் அறுவை சிகிச்சை மேற்கொண்டுள்ளதாகவும் அதற்கான மருத்துவ உதவித் தொகை வழங்கிடக் கோரி சென்னை உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை இயக்குநரகத்திற்கு 07.03.2017 அன்று பதிவுத் தபால் மூலம் விண்ணப்பத்தினை இணைப்புகளுடன் அனுப்பியதாகவும் ஆனால் தமக்கு இன்னும் உதவித்தொகை வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். சென்னை உள்ளாட்சி நிதித்

தணிக்கை இயக்கக உதவி இயக்குநரின் கடிதம் எண். ஓ.மு.29462/நஓவ (4)/2017 நாள் 08.11.2017ல் இயக்கக அலுவலகக் கட்டிடம் குறளகம் முகவரியிலிருந்து 2017ம் ஆண்டு ஏப்ரல் மாதம் சென்னை நந்தனத்திலுள்ள புதிய கட்டிடத்திற்கு மாறுதல் ஆனதாகவும் கட்டிடம் இடம் மாறுதலில் மனுதாரரின் விண்ணப்பம் காணக்கிடைக்காமல் போய்விட்ட காரணத்தினால், மனுதாரர், விண்ணப்பத்தின் ஒளிநகலில் மருத்துவரின் கையொப்பம், முத்திரை மற்றும் பதிவு எண் ஆகியவற்றைப் பெற்று அதனை அனுப்பி வைத்தால் தகுதிக்குட்பட்டு நடவடிக்கை எடுத்து தொகை வழங்கிட பரிசீலிக்கப்படும் என மனுதாரருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2) 2014-ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், தமிழ்நாட்டில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைபுகளில் பணி செய்யும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளின் மீதான விசாரணை செய்யும் அதிகாரத்தை முறைமன்ற நடுவருக்கு வழங்கியுள்ள சட்டம் ஆகும். உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரோ அவரது பணியாளர்களோ இச்சட்டத்தின் விதிப் பிரிவு 2 (11)ன் கீழ் பொதுப்பணியாளர் என்ற வரன்முறைக்குட்பட்டவரல்லர். எனவே, உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தில் கருத்துருக்களை உரியமுறையில் பரிசீலிக்க ஏதுவாக அக்கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு மனுதாரர் மீண்டும் சென்னை உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநருக்கு அனுப்பிவைக்க அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் இவ்வழக்கினை முடித்து வைத்து ஆணையிடுகிறது.

2017-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

4-12-17

4/12/17

பெறுநர்

1. திருமதி T. வள்ளியம்மாள்,
 17/2-19/3 ஸ்டேன்ஸ் ரோடு,
 4வது வீதி, திருப்பூர் - 641 602.
2. ஆணையர்,
 திருப்பூர் மாநகராட்சி, திருப்பூர்.

நகல்: இயக்குநர்,
உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககம்,
ஒருங்கிணைந்த நிதித்துறை, அலுவலக வளாகம், 4வது தளம் நந்தனம், சென்னை 600 035.
(தகவலுக்காக)